**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 74** **நாள் : 09.04.2025**

**மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்கள், கிண்டி மற்றும் செயின்ட் தாமஸ் மவுண்ட் இரயில் நிலையங்களுக்கிடையில் ரூ.2.81 கோடி மதிப்பில் நடைபாதை மேம்பாலம் அமைக்கும் பணியினை இன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்கள், ஆலந்தூர் மண்டலம், வார்டு-161, ஏ.ஜெ.எஸ். நிதி மேல்நிலைப்பள்ளி அருகில், கிண்டி மற்றும் செயின்ட் தாமஸ் மவுண்ட் இரயில் நிலையங்களுக்கிடையில் ரூ.2.81 கோடி மதிப்பில் நடைபாதை மேம்பாலம் அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள், நடைபாதை அமைப்பதற்கான வரைபடத்தினைப் பார்வையிட்டு, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

பொதுமக்களின் கோரிக்கைகளுக்கிணங்க, அடையாறு மண்டலம், வார்டு-161, ஏ.ஜெ.எஸ். நிதி மேல்நிலைப்பள்ளி அருகில் இரயில்வே சந்திக்கடவு எண்.15ல் கிண்டி மற்றும் செயின்ட் தாமஸ் மவுண்ட் இரயில் நிலையங்களுக்கிடையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.1 கோடி, பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.1.81 கோடி என மொத்தம் ரூ.2.81 கோடி மதிப்பில் நடைபாதை மேம்பாலம் அமைக்கப்படுகிறது. இந்தப் பணியானது இரயில்வே துறையால் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நடைபாதை மேம்பாலம் ஆலந்தூர் மற்றும் ஆதம்பாக்கம் பகுதிகளை இணைக்கின்ற வகையில் அமைக்கப்படுகிறது. இந்த நடைபாதை மேம்பாலத்தில் ஏறும் பாதையின் நீளம் 21 மீ., நடைபாதை பாலத்தின் நீளம் 37 மீ., இறங்கும் பாதையின் நீளம் 21 மீ. என மொத்தம் 80 மீ. நீளம் மற்றும் 3 மீ. அகலத்திற்கு இந்த பாலம் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் உள்ள சுமார் 8000 பொதுமக்கள் பயனடைவார்கள்.

இந்நிகழ்ச்சியில், தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி எஸ். ரேணுகா சீனிவாசன், திருமதி பூங்கொடி ஜெகதீஸ்வரன் மற்றும் மாநகராட்சி, இரயில்வே துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**